2nd November 1966]

(இ) இந்தப் பதினேழு பஞ்சாயத்து யூனியன்களில், பின்வரும் ஆறு பஞ்சாயத்து யூனியன்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் தொடங்க ஏற்கெனவே ஒப்பளிப்பு வழங்கப்பட்டு விட்டது :—

1 கள்ளக்குறிச்சி
2 தியாகதுர்க்கம்
3 வானூர்
4 விக்கிரவாண்டி
5 மைலம்
6 ரிஷிவந்தியம்.

எஞ்சியுள்ள பதினொன்று பஞ்சாயத்து யூனியன்களைப் பொறுத்தவரையில் ஒன்பது பஞ்சாயத்து யூனியன்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் தொடங்க 1966-67-ல் ஒப்பளிப்பு ஆணைகள் பிறப்பிக்கப்படும். விருத்தாசலம், கம்மாபுரம் பஞ்சாயத்து யூனியன்கள் மலேரியா ஒழிப்பு தேசியத் திட்டத்தின் பராமரிப்பு நிலையை அடையும்போது, இவ்விரு யூனியன்களிலும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏற்படுத்தும் வேலை மேற்கொள்ளப்படும்.

Appendix VI.

[*Vide* answer to starred question No. 335 at page 32.]

The Government, in 1964, sanctioned the opening of a Primary Health Centre in Karambakudi Block by converting the existing Government dispensary at Karambakudi. But the Chairman, Karambakudi Panchayat Union, requested the Government to open the Primary Health Centre at Malaiyur in Karambakudi block stating that an extent of 3·94 acres of lands had been donated for the construction of the Centre and that a well was also sunk in that site. Suitable buildings on rent are also available at Malaiyur till permanent buildings are constructed. Hence, the Government ordered the opening of the Primary Health Centre at Malaiyur in Karambakudi Block cancelling the previous orders to convert the Government dispensary at Karambakudi into a Primary Health Centre.

கரம்பக்குடி வட்டாரத்தில் தற்பொழுதுள்ள அரசாங்க மருந்தகத்தை ஆரம்பச் சுகாதார நிலையமாக மாற்றுவதன் மூலம் அத்தகைய நிலையம் ஒன்றை அங்கு நிறுவ அரசாங்கம் 1964-ல் அனுமதியளித்தது. ஆனால், கரம்பக்குடி பஞ்சாயத்து யூனியன் தலைவர், கரம்பக்குடி வட்டாரத்தில் உள்ள மழையூரில் ஆரம்ப சுகாதார நிலையத்தைக் கட்டுவதற்கென 3·94 எக்கர் நிலம் நன்கொடையாக அளிக்கப்பட்டு, அதில் ஒரு கிணறும் தோண்டப்பட்டுள்ளதென்றும், எனவே ஆரம்பச் சுகாதார நிலையத்தை அங்கு ஏற்படுத்தலாம் என்றும் அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டார். மழையூரில் நிலையான கட்டிடங்கள் கட்டும் வரை மேற்படி நிலையத்தை நடத்தப் பொருத்தமான கட்டிடங்களும் வாடகைக்குக் கிடைக்கின்றன. எனவே, அரசாங்கம் கரம்பக்குடியில் உள்ள அரசாங்க மருந்தகத்தை ஆரம்பச் சுகாதார நிலையமாக மாற்றவேண்டுமென்ற தனது முந்திய உத்தரவை மாற்றி, கரம்பக்குடி வட்டாரத்தில் உள்ள மழையூரில் ஆரம்பச் சுகாதார நிலையத்தை ஏற்படுத்த வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்தது.